

சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம் (9.4.2025) முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

# ஒரு கோடியே 10 லட்சம் மதிப்பில் சிங்கம்புணரி - சிதம்பரம் - கம்பம்-பெரியகுளத்தில் தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு புதிய கட்டிடங்கள்!

## கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்புகள்... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

அறுவடைக்குப் பிந்தைய இழப்புக்களைக் குறைக்கவும் விளைபொருட்கள் விநியோகத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்தவும் கோயம்பேடு குளிர்பதனக் கிடங்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பொலிவூட்டப்படும்.

39. **ரூபாய் இருபத்தாறு இலட்சம் மதிப்பீட்டில் மூன்று பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள் நவீனமயமாக்கப்படும்.**

உறுப்பினர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கிடும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தமிழ்நாடு மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன, நாணய மற்றும் கடன் சங்கம் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம் லாயல் மில் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன, நாணய மற்றும் கடன் சங்கம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம் பெருந்துறை பொதுப்பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன, நாணய மற்றும் கடன் சங்கம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிலும், மொத்தம் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

40. **கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் 2,500 நியாய விலைக் கடைகள் பொலிவூட்டப்படும்.**

அனைத்து மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க கூட்டுறவுத் துறையின் கீழ் நியாய விலைக் கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. நியாய விலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைதாரர்கள் சிரமமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெற 2,500 நியாய விலைக் கடைகள் பொலிவூட்டப்படும்.

41. **கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 5,000 நியாய விலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ் பெறப்படும்.**

கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் பொது மக்களுக்கு சிறப்பான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. முழுமையான தர மேலாண்மையை உறுதி செய்யும் பொருட்டு 5,000 நியாய விலை கடைகளுக்கு ISO 9001 மற்றும் ISO 28000 போன்ற தர சான்றிதழ்கள் பெறப்படும்.

42. **பணியாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் நலனைப் பாதுகாக்க "இடர் களையும் நிதி" (Risk Alleviation Fund) உருவாக்கப்படும்.**

பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தவிர்க்க முடியாத இடர்பாடுகளால் ஏற்படும் வாராக்கடன் மற்றும் நிதி இழப்புகளைக் குறைக்கவும், பிணையதாரர்களின் நிதி நலனைப் பாதுகாக்கவும் "இடர் களையும் நிதி" உருவாக்கப்படும். வாரிசுகள் இல்லாத உறுப்பினர்களின் மரணம், பணிநீக்கம், மருத்துவச் செயலிழப்பு முதலான காரணங்களால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய இந்நிதி பயன்படுத்தப்படும்.

43. **ரூபாய் எட்டு கோடி மதிப்பீட்டில் சென்னை தீவுத்திடலில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் கட்டப்படும்.**

சென்னை தீவுத்திடல் சத்தியவாணிமுத்து நகரில் வசித்துவரும் ஏழை எளிய மக்கள் வங்கிச் சேவைகளை எளிதாகப் பெற வங்கிக் கிளை, அவர்களுக்கு நியாயமான விலையில் தரமான நுகர் பொருட்கள் கிடைக்க சிறப்பங்காடி, தற்போது வாடகைக்

கட்டடத்தில் செயல்பட்டு வரும் சென்னை மாவட்டக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் ஆகியவற்றை கொண்ட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

44. **கூட்டுறவுச் சங்கங்களின் ஐநூறு உறுப்பினர்களுக்கு வெளி மாநிலங்களில் நேரடிப் பயிற்சி வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சேவைகளை மேம்படுத்த, பிற மாநிலங்களில் சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவு அமைப்புகளை நேரடியாகப் பார்வையிட்டு அங்கு செயல்படுத்தப்படும் சிறந்த திட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்களின் 500 உறுப்பினர்களுக்கு வெளிமாநிலங்களில் நேரடிப் பயிற்சி அளிக்கப்படும்.

45. **ரூபாய் நான்கு கோடி மதிப்பீட்டில் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம் ஆகியவற்றை சிறப்பாக மேற்கொள்ள மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு கணினி உள்ளிட்ட நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.**

மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நடத்தப்படும் உறுப்பினர் விழிப்புணர்வு முகாம், இளைஞர் ஈர்ப்பு முகாம் மற்றும் கூட்டுறவு சேவை கள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துச்செல்ல அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் கணினி, படக்காட்டி, நிழற்படக் கருவி மற்றும் வாகனம் போன்றவை ரூ.4 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

46. **கூட்டுறவு இயக்கத்தில் இளைய தலைமுறையினரை அதிக அளவில் பங்கு பெறச்செய்ய சமூக ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வு, பள்ளி மற்றும் கல்லூரிகளில் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.**

பள்ளி கல்லூரிகளில் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்தி கூட்டுறவு அமைப்புகள் குறித்த விழிப்புணர்வை இளம் தலைமுறையினரிடையே உருவாக்கியும், நவீன வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்தியும் மாணவ, மாணவியருக்கு கூட்டுறவு வங்கிகளில் சேமிப்புக் கணக்கு, தொடர் இட்டு வைப்புக் கணக்கு போன்றவை தொடங்கப்படும். இளம் தலைமுறையினரைக் கவரும்வண்ணம் கூட்டுறவு அமைப்புகள் வழங்கும் நவீன சேவைகள் குறித்த தகவல் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் கொண்டு செல்லப்படும்.

47. **சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025ஐ முன்னிட்டு மாபெரும் கூட்டுறவு கண்காட்சி நடத்தப்படும்.**

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025ஐ முன்னிட்டு, நமது மாநிலக் கூட்டுறவுகளின் சிறப்பம்சங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும், கூட்டுறவுகளின் சிறந்த செயல்பாடுகளைப் பகிரவும், கூட்டுறவு அமைப்புகளின் தரமான தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்திடவும் அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த கூட்டுறவு அமைப்புகளும் பங்குபெறும்வண்ணம் இந்திய அளவிலான கூட்டுறவுக் கண்காட்சி நடத்தப்படும்.

48. **சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025ஐ கொண்டாடும் பொருட்டு "கூட்டுறவு மாரத்தான்" நடத்தப்படும்.**

கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கூட்டுறவு அமைப்புகள் வழங்கி வரும் சேவைகளை அனைத்துத் தரப்பு மக்களிடையே கொண்டு சேர்க்கவும், இளைய தலைமுறையினரை கூட்டுறவு அமைப்புகளில் அதிக அளவில் பங்கேற்கச் செய்யவும் அனைத்து மாவட்டங்களிலும் "கூட்டுறவு மாரத்தான்" நடத்தப்படும்.

49. **சர்வதேச கூட்டுறவு ஆண்டை முன்னிட்டு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் கூட்டுறவாளர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.**

கூட்டுறவின் மாண்பைப் போற்றும் விதமாக ஐக்கிய நாடுகள் அமைப்பு 2025 ஆம் ஆண்டை சர்வதேசக் கூட்டுறவு ஆண்டாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது. இந்தியாவிலேயே முதலாவதாகக் கூட்டுறவு சங்கம் கண்ட நமது மாநிலத்தில் பல்வேறு விதமான கூட்டுறவு அமைப்புகள் ஏழை எளிய பொதுமக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது முதல் மாவட்டங்களுக்கிடையே பரவலான பொருளாதார முன்னேற்றத்திற்கும் காரணமாக இருந்து நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்றன. இப்பெருமைக்குக் காரணமான கூட்டுறவு அமைப்புகளுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்புகளை வெளியிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உடல்நலக்குறைவால் மறைவெய்திய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (9.4.2025) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது மகளும், முன்னாள் ஆளுநருமான திருமதி தமிழிசை சௌந்தரராஜன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர ராஜா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## ரூ.570 கோடியில் மீனவர்களுக்கு சிறப்புத் திட்டங்கள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றி!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

*சென்னை, ஏப். 11 -*

"ரூ.570 கோடியில் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு சிறப்புதிட்டங்களை 110 விதியின் கீழ் அறிவித்துள்ள முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மீனவ மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்." என்று கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

282025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், மீனவர்கள் பிரச்சினை குறித்தும், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காகவும் தீர்மானம் நிறைவேற்றிய தோடு, கச்சத்தீவை மீட்கவேண்டுமென்றும், இலங்கைச் சிறையில் வாடும் தமிழ்நாடு மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்றும், இலங்கைக் கடற்படை கைப்பற்றியுள்ள படகுகளைத் திருப்பித் தரவேண்டும் என்று வலியுறுத்தியும். இலங்கை பயணத்தின் போது இந்தியப் பிரதமர் அவர்கள் இது குறித்து இலங்கை அரசுடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானத்தை நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தை இந்தியப் பிரதமர் அவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக அரசிற்கு மீனவ மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்கும் வகையில் கச்சத்தீவுப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியின் ஒரு பகுதியாக, கழகஅரசின் சார்பில் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு, மன்னார் வளைகுடா பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக தெற்கு பகுதியில் இந்தியப் பெருங்கடல் நோக்கிச் செல்வதற்கு ஏதுவாக தங்கச்சிமடம் பகுதியில் 133 கோடி ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அரசாணை பிறப்பித்து இதற்கான பணிகள் விரைவில் துவங்கும் எனவும் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாம்பன் பகுதியிலும், ரூ.6 கோடியில் மீன் விதைப் பண்ணைகள் புனரமைத்தல் சாத்தனூர், மஞ்சளாறு, வைகை அணை, அகரம் உள்ளிட்ட அனைத்து அரசு மீன் விதைப்பண்ணைகள் புனரமைக்கப்படும்.

ரூ. 40 இலட்சம் மானியத்தில் மீன்பிடி உபகரணங்கள் நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் மாற்று முறை மீன் பிடிப்பினை ஊக்குவித்திட 200 நாட்டுப்படகு மீனவர்களுக்கு கணவாய் மீன்பிடி உபகரணங்கள் வாங்கிட மானியம் வழங்கப்படும்.

ரூ.6 கோடியில் கோரிக்கை தமிழ்நாடு நிதி நிலை அறிக்கை கோடியில் மீன் இறங்குதளங்கள் மேம்படுத்துதல் புதுக் கோட்டை மாவட்டம், கோட்டைப் பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மேம்படுத்தப்படும்.

ரூ.10 இலட்சத்தில் மீன் வளர்ப்பு உள்ளீட்டு மானியம் மீன் வளர்ப்போரின் வருமானத்தை அதிகரித்திடவும், நிலையான மீன்வளர்ப்பினைத் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக, மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் வாயிலாக 1,000 ஹெக்டேர் பரப்பளவில் மீன் வளர்ப்பு மேற்கொள்ள உள்ளீட்டு மானியமாக வழங்கப்படும்

ரூ.50 இலட்சத்தில் தேசிய அளவிலான மீன்வள புத்தாக்கம் மற்றும் புத்தொழில் மாநாடு தமிழ்நாடு மீன்வள மாணவர்கள், தொழில்முனைவோர் பயன்பெறும் வகையில், தொழில் துறை வல்லுநர்களின் பங்கேற்போடு நடத்தப்படும்.

மீன்வள தொழில்நுட்ப ஆலோசனை மேம்பாடு மற்றும் மேலாண்மைக் குழு மீன்வளம் சார்ந்த அனைத்து தொழில் முனைவோருக்கும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கி வழிகாட்டிட ஏதுவாக அமைக்கப்படும்.

இது போன்ற மீனவர் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை வழங்கி மீனவ மக்களின் வாழ்வாதாரங்களை உறுதிசெய்யும் ஒப்பற்ற முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கழக மீனவர் அணி சார்பாகவும், மீனவர் மக்களின் சார்பாகவும் ஆயிரமாயிரம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில்கூறியுள்ளார்.

# அரூர் பேரூர்க் கழகச் செயலாளர் முல்லை ரவியின் தந்தை மறைவு!

## தருமபுரி மேற்கு – கிழக்கு மாவட்டச் செயலாளர்கள் அஞ்சலி செலுத்தினர்!

*தருமபுரி, ஏப். 11 -*



தர்மபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூர் கழக செயலாளராக பதவி வகித்து வருபவர் முல்லை ரவி இவர் கழகத்தில் முப்பது ஆண்டுகளாக பணியாற்றி பல்வேறு போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சிறைக்கு சென்றுள்ளார் 1998ம் ஆண்டு முதல் கழகத்தில் பேரூர்கழக செயலாளராகவும் பின்னர் 2003ல் முதல் 2007 வரை அரூர் பேரூராட்சி உறுப்பினராகவும் 2006ல் பேரூராட்சி துணை தலைவராகவும் தற்போது பேரூராட்சி நியமன குழு உறுப்பினராக பணியாற்றி வருகிறார். இவரது தந்தை பி. முனுசாமி. இவர் ஆரம்ப கால கழக உறுப்பினராக பணியாற்றியவர். இவர் நேற்று காலை சிங்கா ரப்பேட்டையில் உள்ள அவரது தோட்டத்தில் இயற்கை எய்தினார் தகவல் அறிந்து வந்து அவரது உடலுக்கு தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் நாடாளுமன்ற வழக்கறிஞர் ஆ.மணி, முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி, வர்த்தகரணி, மாநில துணை செயலாளர் அ.சத்யமூர்த்தி, அரூர் சிறப்பு நிலை பேரூராட்சி துணைத் தலைவர் சூர்யாதனபால், மாவட்ட துணை செயலாளர் செ.கிருஷ்ணகுமார், கிருஷ்ணகிரி மாவட்ட துணை செயலாளர் சந்திரன், தருமபுரி மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதாமோகன்தாஸ், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.வேடம்மாள், கோ.சந்திரமோகன், வே.சௌந்தரராசு, விவசாய அணி மாவட்ட தலைவர் சி.தென்னரசு ஊத்தங்கரை ஒன்றிய செயலாளர் முன்றம்பட்டி குமரேசன் ஊத்தங்கரை ஒன்றிய செயலாளர் ரஜினிசெல்வம் ஆகியோர் பி.முனுசாமி உடலுக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினர்.



திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கலைஞர் மத்திய பேருந்து நிலையம் முன்பு தெற்கு மாநகரச் செயலாளர் டிகேடி மு.நாகராசன் தலைமையில் வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் முன்னிலையில் ஆளுநர் திருப்பி அனுப்பிய அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று வழங்கிய உச்சநீதிமன்ற தீர்ப்பைக் கொண்டாடும் வகையிலும், இந்த முயற்சிக்கு தீவிரமாக போராடி மாநில உரிமைகளை பெற்றுத்தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .



திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் குடிமங்கலம் நால்ரோடு பகுதியில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் குடிமங்கலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ச.ராஜமாணிக்கம் முன்னிலையில் ஆளுநர் திருப்பி அனுப்பிய அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று வழங்கிய உச்சநீதிமன்ற தீர்ப்பை கொண்டாடும் வகையிலும், இந்த முயற்சிக்கு தீவிரமாக போராடி மாநில உரிமைகளை பெற்றுத்தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

## மூக்கறுபட்ட ஆளுநர்

